DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-29/2020

Prosecution witness – PW 3

| | | |
|---|---|---|
| Name | : திரு.அசனாலெவை | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

07.03.2026 - 11.45 PM

முதல் விசாரணை:-

1. நான் வாலிநோக்கம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஐ தெரியும்.

2. சம்பவம் நடந்த தினத்தன்று நான் சென்னையில் இருந்தேன். தேதி நினைவில் இல்லை. ஜனவரி மாதம் 2020ம் வருடத்தில் நான் சென்னையிலிருந்து வந்த பிறகு வாலிநோக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பீர்முகமதுவுக்கும், ஜெய்புன்நிஷாவுக்கும் பிரச்சனை எற்பட்டதாக தெரிந்துகொண்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்படி விவரங்களை தான் சொன்னேன்.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -**

வாலிநோக்கம் ஊராட்சி மன்ற தேர்தல் நடந்த போது அ.சா.1 ஜெய்புன் நிஷா ஊராட்சி மன்ற தலைவர் வெற்றி பெறுவதற்காக கடுமையாக உழைத்தார் என்றால் சரிதான். இதனால் அவரை எதிர்த்து போட்டியிட்ட எதிரி முகம்மது முஜ்ஜமில் என்பவருக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்ற

பிறகு கடந்த 13.01.2020ம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் அ.சா.1 ஜெய்புன் நிஷாவும் பீர்முகம்மதுவும் இருவரும் தனிமையில் இருந்ததாகவும், தவறாக நடந்து கொண்டதாகவும், அதனால் பீர்முகமதுவின் தந்தையும், தாயும் இருவரும் மேற்படி அ.சா.1 ஐயும் பீர்முகமதுவையும் பிடித்து கட்டிவைத்ததாகவும் அதன் பிறகு ஜமாத்தலைவரும், நிர்வாகிகளும் வந்து அவிழ்த்து விட்டதாக சம்பவம் நடந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேலும் எதிரி அவதுாறாகவும், அருவருக்கத்தக்க வார்த்தைகளாலும் உங்களிடமும், ஹக்குல்லாவிடம் சொன்னார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் பற்றி போலீசார் விசாரணையில் எதிரி அ.சா.1ன் மீது அவதுாறு பரப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி முஜ்ஜமில் எனக்கு உறவினர் என்றால் சரிதான். எதிரி உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக வழக்கிற்கு விரோதமாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 18:31:00 +0530